# மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது
# REPENT, FOR THE KINGDOM OF HEAVEN IS NEAR

**அறிமுகம்**

தேவனுடைய ராஜ்யம் என்பது வெறும் பேச்சு அல்ல; அது சக்தி வாய்ந்த மற்றொரு பிரசங்கமும் அல்ல; அது கிறிஸ்தவர்களுக்குள் காணப்படும் தேவனுடைய பெலனாயிருக்கிறது. தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்தை உண்மையாக எண்ணி அதன் மீது நமக்கு ஏற்படுகின்ற விசுவாசம், இந்த "உலகத்தை நாம் பார்க்கும் பார்வையை" மாற்றி விடுகின்றது. *1 கொரி. 2:4,5; 4:20.* பிரசங்கத்தின் மூலமாக இயேசு இந்த ராஜ்யத்தை மனுக்குலத்திடம் கொண்டுவந்தார். *லூக்கா 4:43.* குறித்த காலத்தில், புதிய ஆவிக்குரிய ராஜ்யத்தை தேவன் ஆயத்தப்படுத்துவதற்கு அவருக்கு உதவியாக இருக்கும்படி தம்மைத் தாமே இவர் சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். *2 கொரிந்தியர் 5:16-19.* இந்த அதிகார எல்லைக்கு உட்பட்டு தேவனுடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுகிறது. *மத்தேயு 6:10.* சாத்தானுடைய ராஜ்யத்திலிருந்து இயேசு கிறிஸ்துவால் வெளியே அழைக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் தேவனுடைய சித்தம் செய்யப்படுகின்றது. அதனால் அவர்களுக்குள் மாத்திரமே தேவனுடைய ராஜ்யத்தை பார்க்கமுடியும். *லூக்கா 17:20,21.* எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிறிஸ்தவர்களுக்கு கிடைத்திருப்பதால், அவர்களை தேவனுடைய நித்திய குடும்பத்திற்கென்று பிள்ளைகளாக உருவாக்குவதற்கு செய்யவேண்டிய வேலைகளை பரிசுத்த ஆவியானவர் செய்யமுடிகிறது. *எபே. 1:3-14.* பிதாவாகிய தேவனும், இயேசுகிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் ஒன்று சேர்ந்து, வயதில் பெரியவர்களாக இருக்கும் மக்களுக்குள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, "கிறிஸ்துவுக்குள்" என்று





அடையாளப்படுத்தப்படும் அதிகார எல்லை விளங்குகின்றது. *1 கொரி 15:22.* இயேசு இந்தப் பூமியில் தேவனுடைய குடும்பத்தை உருவாக்குகின்ற ஒரு இடமாக இந்த ராஜ்யம் இருக்கின்றது. *எபே. 2:19-22.* இயேசு பரலோகத்துக்கு திரும்பவும் போய்விட்ட பிறகு "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளுக்கு" ஏற்பட்ட புதிய மாற்றமாக இந்த "கிறிஸ்துவுக்குள்ளான" ராஜ்யம் திகழ்கின்றது. *யோ. 18:36; ரோமர் 9:8.* தேவனுடைய ராஜ்யத்தில் "மனிதர்கள் வாழ்கின்ற பகுதிக்கு" இயேசு கிறிஸ்து செய்தது இதுதான். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட விசுவாசிகள் மகிமைப்படும்படியாகவும், பிதாவாகிய தேவன் மகிமைப்படும்படியாகவும் அவர் இதைச் செய்தார். *யோவான் 12:23,24; 14:12-14; 1 கொரி. 2:6-10; வெளி. 19:6-8.* கிறிஸ்துவுக்குள்ளான ராஜ்யத்தில் முதலில் விசுவாசிகளானவர்கள் மகிழ்ச்சியுடன் அநுபவித்த வாழ்க்கையைப் பற்றி *அப். 2:42-47* வசனங்களில் நாம் பார்க்க முடிகிறது. கடந்த பாடத்தில் காணப்பட்ட முக்கிய தலைப்புகளைப் பற்றி சுருக்கமான விவரமாக மேற்காணும் பகுதி அமைந்துள்ளது. இந்த தலைப்புகளைப் பற்றி விரிவாக விளக்குவதே இந்த பாடத்தின் நோக்கம்.

**பாடம்**

"மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று இயேசு சொன்னதின் அர்த்தத்தை நாம் மறுபடியும் சிந்திப்போம். *மத். 4:17.* முதல் நூற்றாண்டில் வாழ்ந்த தெயோப்பிலுவிற்கும் மற்ற கிறிஸ்தவர்களுக்கும் எது போதிக்கப்பட்டிருந்ததோ, அதே காரியத்தின் மீது நாம் விசுவாசம் கொண்டு கீழ்ப்படிவதினால், பரலோக ராஜ்யம் நமக்கு சமீபமாய் வருகிறது. அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி போதிக்கப்பட்டிருந்தார்கள். ஏனெனில், இயேசுவின் போதனைகள் எல்லாம் அந்த ராஜ்யத்தைப் பற்றினதாகவே இருந்தன. *லூக்கா 4:43;*

*அப்போஸ்தலர் 1:3-8; 28:31.* அவர் போதித்த ஒவ்வொரு பாடமும், தேவனுடைய பிள்ளைகள் அவருடைய ராஜ்யத்துக்குள் இணைக்கப் படுவதைப் பற்றிய ஒரு கருத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றது. இயேசுவும் அப்போஸ்தலர்களும் போதித்த தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த அதே செய்தியை ஒருவன்/ஒருத்தி கேள்விப்பட்டாலொழிய அவன்/அவள் ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபடியும் பிறக்கவே முடியாது. *யோவான் 3:5; அப்போ. 8:12;20:25.* மறுபடியும் பிறக்கின்ற கடைசி செயல் முறை நடைபெறுகிறபோது, கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கு உட்படுத்தப்படுகிறார்கள். *ரோ.6:8-11; கொலோசெயர் 1:13; எபேசியர் 5:5.* நாம் இப்பொழுது ராஜ்யத்தின் குடிமக்களாய் இருக்கிறோம். *பிலிப்பியர் 2:14-16; 3:20,21.* கிறிஸ்தவர்களாகிய நாம் புதிய உடன்படிக்கையை தொடர்ந்து ஏற்றுக்கொள்வதால், நமக்கு ஆவிக்குரிய வளர்ச்சி உண்டாகிறது. இதன் பலனாக நாம் நமது இரட்சிப்புக்குள் வளர்ச்சியடைவதால், தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யம் நமக்குள் வந்து விடுகின்றது. *லூக்கா 17:20,21; எபேசியர் 5:5; பிலிப்பியர் 2:13; 1 பேதுரு 2:3.*

தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து எப்பொழுதுமே தேவனுடைய சித்தத்தின்படி செய்து வந்தார். இன்னமும் அப்படியே தான் செய்கிறார். இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களை ஆளுவதை எங்கு பார்க்கிறோமோ, அங்கு நாம் தேவனுடைய ராஜ்யத்தையே பார்க்கிறோம். தேவனுடைய அதிகார எல்லைக்கு வெளியே கிறிஸ்துவின் ராஜ்யம் இருப்பதாக நாம் நினைக்க முடியாது; அப்படிப்போல அவருடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு வெளியே சபை இருப்பதாகவும் நாம் நினைக்க முடியாது. *கொலோசெயர் 1:13,14.* பரலோக ராஜ்யத்தில் இருக்கின்ற தேவனுடைய பிள்ளைகளாக நம்மை அடையாளம் கண்டுகொண்டால் தான், நான்கு சுவிசேஷ புத்தகங்களில் இக்காலத்தில் வாழும் நமக்கென்று





இயேசு போதித்தவைகளை ஒழுங்காக வாசிக்கவும், முழுமையாக புரிந்து கொள்ளவும் முடியும். கடைசியாக, தேவனுடைய ராஜ்யத்தை திரும்ப அவரிடத்தில் ஒப்படைப்பதற்கென்று இயேசு வானத்தில் தோன்றி, நமக்கான நியாயத்தீர்ப்பு முடிந்த பிறகு, இதே ராஜ்யத்தையும் இதில் வாழப்போகின்ற வாழ்க்கையையும் சுதந்தரிப்போம் என்பதே கிறிஸ்தவர்களின் நம்பிக்கை. *மத்தேயு 19:29; 25:34; யாக்கோபு 1:12;2:5; ரோமர் 2:6,10; வெளி. 2:7,11,17, 26-29; 3:5,12,21.* பூமியின் மீதுள்ள கிறிஸ்தவனுடைய வாழ்க்கைக்கு "தேவனுடைய குமாரன்" என்ற அடையாளம் மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று" சாட்சி கொடுக்கும்படி பரிசுத்த ஆவியானவரை தேவன் அனுப்பினார். *ரோமர் 8:16.*

*நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான். 1 யோ. 3:1-3.*

"மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று இயேசு சொன்னபோது அவர் எந்த அர்த்தத்தில் அப்படி சொன்னார் என்பதை நாம் மறுபடியும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். *மத்தேயு 4:17.* பரலோக ராஜ்யம் முதன்முதலாக பூமியில் இடம் பெற

வருகிறது என்ற அர்த்தத்தில் அவர் அப்படிச் சொல்லவில்லை. தேவனை நாம் அவருடைய ராஜ்யத்திலிருந்து தனியே பிரிக்கமுடியாது. ஆகையினால், தேவன் நித்தியமானவராகவும், ஆவிக்குரியவராகவும் இருக்கிறபடியினால், அவருடைய ராஜ்யமும் ஆவிக்குரிய நித்திய ராஜ்யமாய் இருக்கின்றது. தேவனுடைய பரலோக ராஜ்யத்திற்கு ஏற்ற கனியை கொடுத்திராத ஒரு ஜனக்கூட்டத்துக்கு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கும்படியாக இயேசு அனுப்பப்பட்டார். *லூக்கா 4:43.* இஸ்ரவேலை சேர்ந்த சில தனிப்பட்ட நபர்களுடைய வாழ்க்கையில் தமது ராஜ்யத்தை நிலை நிறுத்தும்படிக்கு தேவன் இஸ்ரவேலோடு போராடவேண்டியிருந்தது. “மீதியாயிருந்தவர்களிடத்தில்” அவருடைய சித்தம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் அப்படி நடக்கவில்லை. *ரோமர் 9:27; 11:5.* பரலோக ராஜ்யத்தின் ஆவிக்குரிய இயல்பை வெளிப்படுத்தும்படி கிறிஸ்துவானவர் வந்துவிட்டதினால், அந்த ராஜ்யம் யூதர்களுக்கு சமீபித்திருந்தது. மாம்சத்திற்குரிய மாதிரியைக் கொண்டிருந்த ராஜ்யத்தில் வாழ்ந்துகொண்டிருந்த யூதர்களால் பார்க்கமுடியாதிருந்த ஒரு ஆவிக்குரிய ராஜ்யத்தைக் குறித்து அவர் பிரசங்கித்தார். தாவீது மற்றும் சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில் மற்ற தேசங்களைவிட மிகவும் சிறப்பான முறையில் இஸ்ரவேல் தேசம் அனுபவித்து மகிழ்ந்த மகிமையை மீட்டுக் கொடுக்கும்படி அவர் வரவில்லை. எருசலேமில் இருந்த தேவாலயம் இடிக்கப்பட்டுப்போகவேண்டியதாயிருந்தது. *மாற்கு 13:1-4.* மாம்சத்திற் குரிய இந்த ஆலயத்தை ரோமப்படையினர் அழிக்கும்படிக்கு தேவன் அவர்களுக்கு அனுமதி அளித்தார். பூமியின் மீது சமாதானம் உண்டாகாதபடிக்கு இது ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கக்கூடும் என்பதை தேவன் அறிந்திருந்தார். *லூக்கா 21:20-24.* மாம்சத்திற்குரிய இஸ்ரவேலர்கள், தேவாலயத்தின் மதில் சுவரில் ஒரு பகுதியென்று தாங்கள் நம்புகின்ற ஒரு சுவற்றண்டை சென்று இன்றளவிலும்





அழுதுகொண்டிருக்கிறார்கள்; மேலும் மத்திய கிழக்கு பகுதியை சேர்ந்தவர்கள் இந்த பகுதியிலுள்ள நிலங்களையும், கட்டடங்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்துவிட்டதினால், இதைக்குறித்து கலக்கத்தோடு இருக்கிறார்கள்.

ஒருவன் மறுபடியும் பிறந்து கிறிஸ்தவனாவதற்கு செய்யவேண்டிய செயல்முறைகளை செய்ய ஆரம்பிக்கும்போதே, அவனுடைய விசுவாசம் வளர்ச்சியடைய ஆரம்பித்துவிடுகின்றது. தேவனுடைய பிள்ளைகளென்ற அடையாளத்தின் மீது நமக்கு இருக்கும் விசுவாசம், நான்கு சுவிசேஷ புத்தகங்களில் இயேசு வெளிப்படுத்திய தேவனுடைய நீதியை உற்பத்தி செய்வதற்கு ஏற்ப வளர்ச்சியடைகின்றது. *ரோமர் 1:16,17.* மக்கள் தங்களுடைய அடையாளத்திற்கு தகுந்தபடியே நடந்துகொள்ளுகிறார்கள். பொய்யர்கள் பொய் சொல்லுகிறார்கள். திருடர்கள் திருடுகிறார்கள்; தேவனுடைய பிள்ளைகள் இவ்விரண்டையும் செய்வதில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவின் போதனையின் மீது நமக்கிருக்கும் விசுவாசத்தை நம்முடைய நடத்தையில் காண்பிக்க ஆரம்பிக்கும் போதுதான் கற்றுக்கொள்வதற்கென்று இருக்கின்ற மூன்றாம் நிலைக்கு நாம் செல்கின்றோம். *மத்தேயு 7:24.* உதாரணத்திற்கு, விசுவாசத்தை நடத்தையில் காண்பிக்கின்ற இந்த நிலையை அடைகின்றபோதுதான் *மத்தேயு 5:3-7:23* வரை உள்ள வசனங்களில் எவ்விதமான மனிதர்களை தேவன் விரும்புவதாக இயேசுவின் உபதேசத்தில் நாம் “உணர்ந்து புரிந்துகொண்டோமோ” அவ்விதமான மனிதர்களாக நாம் மாறமுடியும். உண்மையில், இரக்கமுள்ளவர்களாக இருக்கும்படி நாம் பழகிக்கொள்ளும் வரையில் ஒருபோதும் நம்மால் இரக்கமுள்ளவர்களாயிருக்க முடியாது. புதிய உடன்படிக்கையின் மீதுள்ள நமது விசுவாசத்திற்கு நாம் தொடர்ந்து கீழ்ப்படிகின்றபோது, வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள அவருடைய போதனைகள் நம்முடைய இருதயங்களிலும் மனங்களிலும்

இடம்பெற்றுவிடுகின்றன. *ரோமர் 1:7; 2 கொரி. 3:18; எபிரெயர் 8:10.* நாம் தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமாய் இருக்கிறோம் என்று அவருடைய வசனம் விவரிக்கின்றது. *2 கொரி. 6:18.* தேவனுடைய வசனத்தின் மீது நமக்கிருக்கும் விசுவாசத்திற்கு கீழ்ப்படிகின்ற நமது செயல், நமது உள்ளான மனிதர்களை புது சிருஷ்டியாக உருவாக்குகின்றது. அதாவது நமது குணங்களிலும், செயல்களிலும் மாற்றங்களை உண்டாக்குகிறது. *மத்தேயு 15:15-20; ரோமர் 6:19; 2 கொரிந்தியர் 5:16-19; எபேசியர் 4:20-24.*

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்காக செய்யும் செயல்களில் ஒன்றாக இருப்பது, அவர்களுக்கு அவர் கொடுக்கின்ற அடையாளமாகும். பார்க்கவும் *ரோமர் 2:12-16; எபேசியர் 1:13.* உண்மையுள்ள விசுவாசிகளோடு பரிசுத்த ஆவியானவர் இருக்கிறதினால், அவர்கள் தங்கள் மாம்சத்திற்குரிய சரீரங்களை விட்டு போகின்றபோது, அவர்களுக்கு புதிய சரீரங்கள் கொடுக்கப்படும் என்ற உறுதி கிடைக்கிறது. *ரோமர் 8:10,11.* நம்மோடு பரிசுத்த ஆவியானவர் கொண்டுள்ள ஐக்கியம், தேவனுடைய மகிமையுள்ள ராஜ்யத்தில் நமக்கு இருக்கின்ற சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கின்றது. *ரோமர் 8:17; எபேசியர் 1:14.* பரலோகத்திலிருக்கிற நமது பிதாவோடு தொடர்புகொள்ளுவதற்கும் அவர் உதவுகின்றார். *ரோமர் 8:26,27.* நமது அடையாளமாகவும், உயிர்த்தெழுதலில் நமக்கு கிடைக்க இருக்கின்ற புதிய சரீரங்களுக்கான நம்பிக்கையாகவும், நமது சுதந்தரமாகவும், தேவனோடு நாம் தெளிவாக தொடர்புகொள்வதற்கு உதவுபவராகவும், நம்மோடு ஐக்கியம் கொண்டுள்ள பரிசுத்த ஆவியானவர் செயல்படுகின்றார். அவர் தேவனுடைய வசனத்தை கொண்டு நம்மை வழிநடத்தவும் செய்கின்றார்; ஆயினும், நாம் கேட்டு புரிந்துகொண்டுள்ள வசனத்தின் மீது நாம் வைத்துள்ள விசுவாசத்திற்கு





தகுந்தபடி பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்தமுடியும் என்பதை புரிந்துகொள்கிறோம். *ரோமர் 8:5-8; யாக்கோபு 1:2-4, 22-25; 2:16,17.*

இப்பொழுது நம் கவனத்தை, சபைக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய ராஜ்யத்திற்கும் இடையிலுள்ள உறவின்மீது திருப்பிக் கொள்ளுவோம். முதலாவதாக, தேவனுடைய ராஜ்யத்திற்கும், அவருடைய குமாரனுடைய ராஜ்யத்திற்கும் இடையிலுள்ள உறவைப் பற்றி கவனிக்கலாம். தேவனுடைய ராஜ்யத்திற்கும் இயேசு கிறிஸ்துவினுடைய ராஜ்யத்திற்கும் இடையிலுள்ள உறவை புரிந்துகொள்ளுவதால், இந்த பூமியில் செயல்படுகின்ற சபைக்கு தலைவராகவும், கர்த்தராகவும், பிரதான ஆசாரியராகவும் கிறிஸ்தவர்களின் ராஜாவாகவும் இருக்கின்ற இயேசுவின் ஆளுகைக்கும், சபைக்கும் இடையிலுள்ள உறவைக்குறித்து தெளிவுபெற்றுக்கொள்ளமுடியும். வேதத்தைக் கற்றுக்கொள்ளும் மாணவர்கள் இயேசு திரும்ப திரும்ப சொல்லுவதை கவனிப்பதின் மூலம் பெரும்பாலான தங்கள் குழப்பதை தீர்த்துக்கொள்ள முடியும்: “என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்.” *யோவான் 6:38.* “உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று தேவனை நோக்கி ஜெபிக்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களுக்கு போதித்தார். *மத்தேயு 6:10.* தேவன் தெரிவிக்கின்ற வரலாற்றில், இயேசு தம்முடைய பங்கைபற்றி என்ன சொன்னார் என்பதை நாம் உன்னிப்பாகக் கேட்டு கவனத்தில் கொள்ளவேண்டும். இயேசு “யார்” என்பதைக் குறித்தும் அவர் என்ன செய்ய இருந்தார் என்பதைக்குறித்தும் குழப்பத்தோடு இருந்தவர்களை நோக்கி இயேசு இவ்விதமாகச் சொன்னார்: “நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என்

சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்." *யோவான் 8:28.*

இயேசு இந்த பூமியில் வாழ்கின்றபோதோ, பரலோகத்தில் ஆட்சி செய்கின்றபோதோ, தமக்கென்று அவர் பேராசையோடு எதையும் ஒருபோதும் பற்றிக்கொண்டதில்லை. பார்க்கவும் *எபிரெயர் 1:5-13. பிலிப்பியர் 2:6-11* வசனங்களில் இயேசுவுக்கிருந்த அதே சிந்தையே பிலிப்பியருக்கும் இருக்கவேண்டுமென்று பவுல் எழுதியுள்ள வேதப்பகுதியில் பதினோராம் வசனத்தை தயவுகூர்ந்து கவனியுங்கள்: "**பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக** இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." இயேசு தம்மோடிருக்கும் தேவனுடைய பிள்ளைகள் மூலமாக பிதாவை மகிமைப்படுத்துகிறார், இனி அவர் உருவாக்கப்போகின்ற பிள்ளைகள் மூலமாகவும் அவர் பிதாவை மகிமைப்படுத்துவார். இதைக்குறித்து பவுல் தொடர்ந்து பேசுகையில் *பிலிப்பியர் 2:15* ஆம் வசனத்தில் "தேவனுடைய மாசற்ற பிள்ளைகள்" என்றும் குறிப்பிடுகின்றான். தேவனுடைய வசனத்தில் காணப்படும் மிக தெளிவான இரண்டு போதனைகளை நாம் புரிந்துகொள்வேண்டியது அவசியம்: **ஒன்று,** தேவனுடைய பரலோக ராஜ்யத்தில் அவருடைய பிள்ளைகளாயிருக்கும்படிக்கு அவர் மனுக்குலத்தைப் படைத்தார். *ரோமர் 8:18-30; வெளி. 21:7;* **இரண்டு,** "அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து" சேர்க்கும்படியாக ஆசாரியராகவும் ராஜாவாகவும் இயேசு நியமிக்கப்பட்டார். *எபிரெயர் 2:10; யோவான் 10:14-16.*

தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து இயேசு பிரசங்கித்தார். இந்த ராஜ்யத்தின் அதிகார எல்லைக்குட்பட்டு இவருக்கு ஒரு ராஜ்யம்





கொடுக்கப்பட்டிருக்கிறது. இதே ராஜ்யத்தை தான் அவர் திரும்பவும் தேவனிடம் ஒப்படைக்கப்போகின்றார். இதில்தான் நாம் இருக்கவேண்டும். "தேவனுடைய சித்தத்திற்கு" அப்பாற்பட்டு அவர் ஒருபோதும் எதையும் தேடவுமில்லை, பற்றிக்கொள்ளவுமில்லை. கிறிஸ்தவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி கிறிஸ்துவின் சிந்தையை வளர்த்துக்கொள்வதற்கு ஏதுவாயிருக்கிறது. *1 கொரிந்தியர் 2:16.* இயேசு, தேவனுடைய சித்தத்தைக் குறித்து சிந்தித்தது போலவே நாமும் சிந்திப்பதற்கு கற்றுக்கொள்ளுகிறோம். இயேசு தமது மாம்சத்திற்குரிய ஜீவனை சிலுவையில் பலியிட்டதினால், "பரலோகராஜ்யம்" மனுக்குலத்திற்கு கிடைத்திருக்கின்றது; தேவனுடைய குமாரர்களும், குமாரத்திகளும் தங்கள் இரட்சிப்புக்குள் வளர்வதற்கு ஏற்ற இடமாக இது இருக்கின்றது. *எபே. 2:7; 2 கொரி. 6:18; கலாத்தியர் 4:19; 5:16.*

"கிறிஸ்துவுக்குள்" நமக்கென்று வாசஸ்தலம் இருப்பது உண்மையென்று நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். "விசுவாசத்தினால் நீதிமானாக்கும்" உபதேசம் நமக்குக் கொடுத்திருக்கின்ற அதிகாரத்தினால், கிருபாசனத்தின் மீது நாம் வாழ்கின்றோம். பார்க்கவும் *ரோமர் 3:21-26; 4:25; 5:1.* தேவாலயத்தில் "மகா பரிசுத்த ஸ்தலத்தில்" இந்த கிருபாசனம் செயல்பட்டு வந்தது. *எபிரெயர் 9:1-5.* இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களுடைய "கிருபாதார பலியாக" ஆகிவிட்டதனால் "மகா பரிசுத்த ஸ்தலம்" இப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய சமூகத்திலிருக்கிறது. *எபிரெயர் 10:19-22.* கிறிஸ்தவர்களாகிய நாம் ஞானஸ்நானம் பெறுவதற்குமுன்பு மனந்திரும்பி ஏற்றுக்கொண்ட தேவனுடைய புதிய உடன்படிக்கையில் மேலே சொன்ன எல்லாம் அடங்கியிருக்கிறது. பார்க்கவும் *மத்தேயு 26:28; எபிரெயர் 10:16,17.* நாம் தேவனோடு ஐக்கியமுள்ளவர்களாக வாழ்கின்றோம். *1 யோவான் 1:5-7.*

“நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமா யிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.” *2 கொரிந்தியர் 1:3,4.*

இப்பொழுது நாம் இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கும் சபைக்கும் இடையிலுள்ள உறவைப்பற்றி சிந்திக்கலாம். சாத்தானுடைய ராஜ்யத்திலிருந்து தேவனுடைய ராஜ்யத்தை பற்றிய பிரசங்கத்தினால் “வெளியே அழைக்கப்பட்ட” மக்கள் அவருடைய அன்பின் குமாரனின் ராஜ்யத்திற்கு ஏற்கனவே உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள தவறுபவர்களுக்கு குழப்பம் உருவாகலாம். *கொலோசெயர் 1:13,14.* தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கப்பட்டது, சபையைப்பற்றியோ கிறிஸ்துவின் ராஜ்யத்தைப் பற்றியோ பிரசங்கிக்கப்படவில்லை. *அப்போஸ்தலர் 20:25.* “மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது” என்று இயேசு பிரசங்கித்தார். *மத்தேயு 4:17.* “இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றும் அவர் தமது சீஷர்களிடம் சொன்னார். *மாற்கு 9:1.* இயேசு உண்மையை சொன்னாரா? ஆமாம் அவர் சொன்னார்! இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கென்று பிள்ளைகளை உருவாக்குவதற்காக அவருடைய அதிகார எல்லைக்கு உட்பட்டு இவருக்கு ஒரு ராஜ்யம் கொடுக்கப்பட்டது. இங்கு நாம் புரிந்துகொள்ளவேண்டிய எளிமையான உண்மை என்னவென்றால், இயேசுகிறிஸ்து தமது





சித்தத்தின்படி செயல்படவில்லை என்பதுதான். அவர் பிதாவின் விருப்பங்களின்படி மனுக்குலத்தை உருவாக்குவதற்காக செயல்பட்டார். பிதாவின் சித்தத்தை செய்யும்படிக்கு “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும்” இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட காரணத்திற்கும், தேவனுடைய ராஜ்யத்திற்கும் இடையிலுள்ள உறவை தெளிவுபடுத்துகின்ற உண்மையாக இது இருக்க வேண்டும்.

வயதில் பெரியவர்களாக இருக்கும் மக்கள், இப்பொழுதிருக்கிற “பொல்லாத இப்பிரபஞ்சத்தில்” வாழ்ந்து வரும் சூழ்நிலையில் சாத்தானுடைய ராஜ்யத்தில் நேரத்தை செலவிடுகிறார்கள். *கலாத்தியர் 1:4.* சமய அமைப்புகளில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கும் மக்கள் மூலமாகவும், கல்வி நிறுவனங்களில் இருக்கும் நாத்திகர் மூலமாகவும், அரசியல் சக்தியை பெரிய வியாபாரங்களோடு சேர்க்கிறதின் மூலமாகவும், பொழுது போக்கை செய்தி ஊடகங்களுடன் சேர்க்கிறதின் மூலமாகவும், பிசாசானவன் இந்த உலக ராஜ்யத்தை ஆளுகை செய்கிறான். பார்க்கவும் *2 கொரிந்தியர் 10:2-6; 11:13-15.* இந்த உலக ராஜ்யத்தில் வயதில் பெரியவர்களாக இருக்கும் மக்களை அவர்களுடைய தனிப்பட்ட பாவங்கள் மூலமாக பிசாசானவன் ஆளுகை செய்கிறான். பார்க்கவும் *யோவான் 8:34; ரோமர் 5:21; வெளி. 12:12,13.* “நீதிமான்களாக்கப்பட்ட பாவிகளால்” ஆன ஒரு மக்கள் கூட்டமாகிய சபையானது, இயேசுவின் ராஜ்யத்துக்கு நிகராக இருப்பதாக கிறிஸ்தவர்கள் நினைக்கக்கூடாது. *ரோமர் 5:18.* உண்மையில், நம்முடைய குடியிருப்பு இயேசுவின் ராஜ்யத்தில் இருக்கிறது. அப்படியிருப்பினும், குடிமக்களை விட இயேசுவின் ராஜ்யம் மதிப்புமிக்கதாக இருக்கின்றது.

வேதத்தை போதிப்பவர்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தையும் தேவனுடைய ராஜ்யத்தையும் குறித்த உண்மை நிலையை விட்டுவிடுகின்ற போது, நாம் வெளியே அழைக்கப்பட்ட மக்களை ராஜ்யத்தின் குடிமக்களாக

பார்க்காமல், அவர்களை வேறொரு விதத்தில் பார்க்க முயற்சிப்பதற்கும் வாய்ப்பிருக்கின்றது; அது என்ன? சபை, ஆம், சபை என்று தான் பார்க்கிறோம். ஆனால் "வெளியே அழைக்கப்பட்டவர்களையே" சபை என்பது குறிக்கின்றது. சுவிசேஷ புத்தகங்கள் எல்லாவற்றிலும் இருக்கும் விஷயங்களையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல், இங்கு ஒரு விஷயத்தின் மீதும் அங்கு ஒரு விஷயத்தின் மீதுமாக தங்கள் நம்பிக்கையை வைத்துவிடும் மக்களாக நாம் இருந்தால், தேவன் மேற்கொண்ட பிரதான நடவடிக்கைகளை புரிந்துகொள்வது நமக்குக் கடினமானதாக இருக்கும். கிறிஸ்தவர்களே வேதத்தை கற்றுக்கொள்ளும் மாணவர்கள், அவர்களே இயேசுகிறிஸ்துவுக்கு சீஷராயும் இருக்கிறார்கள். தேவன் பல எழுத்தாளர்களை பயன்படுத்தியிருந்தாலும் கூட பரிசுத்த வேதாகமம் என்பது ஒரே புத்தகமாக இருக்கின்றது. இது தேவன் தெரிவிக்கின்ற வரலாறாக இருப்பதினால், இதை முழுமையாக நாம் கவனிக்க வேண்டியது அவசியம். உலகத் தோற்றத்திற்கு முன்னே நித்தியத்தில் இது ஆரம்பித்து, காலம் முடிவு பெற்று பூமியே இனி இல்லை என்ற ஒரு நிலை வந்த பிறகு நித்தியத்தில் இது நிறைவடையும். *ரோமர் 8:28-30; 11:33-36; 13:11-14; 15:13.*

கிறிஸ்தவர்கள் "மனிதருடைய ஞானத்தை" கொண்டு கிறிஸ்துவின் ராஜ்யம் என்ற அளவிலேயே தங்கள் வாழ்வை அளந்துகொள்வதை நிறுத்தம்படி தீர்மானிக்க வேண்டும். *1 கொரி. 1:17,19,21; 2:5; 3:18-23; 4:6.* மாம்சத்திற்குரிய உலகத்தில் மாம்சத்திற்குரிய சாதனையை தங்கள் பிள்ளைகள் செய்யும்படி விரும்புகின்ற பெற்றோர், தங்கள் பிள்ளைகளை உற்சாகப்படுத்துவதற்காக பெரும்பாலும் மாம்சத்திற்குரிய அழகையும் வலிமையுமே அளவுகோலாக பயன்படுத்துகின்றார்கள்; அப்படி யிருப்பினும், மிகவும் வலிமையான உயரமான உடல்களுடைய ஆண்களை, ஒரு தேவனுடைய பிள்ளையை அடையாளப்படுத்துவதற்கு





அளவுகோலாக இயேசு பயன்படுத்தவில்லை. "சமாதானம்பண்ணு கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப் படுவார்கள்" என்று தான் அவர் சொன்னார். *மத்தேயு 5:9.* முழு வளர்ச்சியடைந்த உடல்களை உடைய இளம் பெண்களை அளவுகோலாக பயன்படுத்தி "சாராள் போன்ற" விசுவாசம் நிறைந்த பெண்களை வேதாகமம் விவரிப்பதில்லை. பார்க்கவும் *1 பேதுரு 3:3-6.* நமது விசுவாசத்தை கட்டி எழுப்பக்கூடிய ஒரு பொருத்தமான பாடத்திட்டத்தை நாம் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் தான், தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்திற்கென்று நம்முடைய "விசுவாசக் கதவினை" முட்டித் தள்ளி திறக்க முடியும். பரிசுத்த ஆவியானவர் காண்பிக்கின்ற ஆவிக்குரிய அளவுகோல்களை பயன்படுத்தியே, நமது வாழ்வினை நாம் அளக்கவேண்டும். *கலாத்தியர் 5:16, 22-26.*

பூமியில் உள்ள எல்லா மனிதருடைய ஆவிகளும் தேவனிடமிருந்து வந்தவைகளாய் இருப்பதால், பரலோகத்தில் தேவனுடன் இருப்பதற்கு எல்லாருக்கும் அங்கு இடம் இருக்கின்றது. *பிரசங்கி 12:7.* நமது "உள்ளான மனிதர்களாகிய" ஆவிகளுக்கு பிதாவாக இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். *எபிரெயர் 12:9.* தம்முடைய ராஜ்யத்தில் தமக்கென்று பிள்ளைகள் இருக்கவேண்டும் என்பது தேவனுடைய திட்டமாய் இருக்கின்றது. இது நிறைவேறுவதற்கு நமது விருப்பம் மிகவும் அவசியமானது. ஒவ்வொரு மனிதனுடைய ஆவியும் தேவனுடைய சாயலின்படி இருப்பதால், அவருடைய பிள்ளையாக இருப்பதற்கு வேண்டிய உள்ளார்ந்த சக்தி நம்மெல்லாருக்கும் இருக்கின்றது. *யாக்கோபு 3:9.* எல்லா மனிதர்களுடைய ஆவிகளும் தேவனுடைய பிள்ளைகளாக அவரிடம் திரும்பிச் சென்றால், அவர்களுக்கு இடமளிப்பதற்கு அவர் தமது இதயத்தை திறந்து வைத்திருக்கின்றார். ஆயினும், நாம் இந்தப் பூமியின் மீது வாழும் காலத்தில் அவர் நம் வசத்தில்

ஒப்புவித்திருக்கும் மாம்சத்திற்குரிய காரியங்களில் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக நாம் நிரூபிக்கவேண்டியது அவசியம். *லூக்கா 16:11,12.* நாம் நமது சரீரங்களை “நீதிக்குரிய ஆயுதங்களாக” பயன்படுத்த வேண்டியது அவசியம். *ரோமர் 6:13.* கிறிஸ்தவர்களுடைய உக்கிராண ஊழியத்தை மையப்படுத்தியே நியாயத்தீர்ப்பு நாளில் விசாரணை நடைபெறும். இயேசுவின் உவமைகள் என்ற தலைப்பிலுள்ள என் புத்தகத்தில் “உலகத்திலும் தேவனுடைய ராஜ்யத்திலும் உள்ள ஒவ்வொரு மனிதனுக்குமான அவருடைய நியாயத்தீர்ப்பு” என்ற நான்காம் பாகத்தைப் பாருங்கள்.

பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்கள் என்ற அடையாளத்தைப் பெற்ற திரளான மக்கள் மனதளவில் ‘‘மனிதனுடைய ஞானத்தால்’’ உருவாக்கப்பட்ட “சபைகள் என்ற பெட்டிக்குள்” அடைபட்டவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பெட்டிக்குள் அகப்பட்டுள்ள மக்கள் தங்கள் கண்களால் காணக்கூடிய சபையை பற்றி மட்டுமே சிந்திக்க முடியும்; கிறிஸ்தவர்கள் புதிதாக பிறந்திருக்கிற ஆவிக்குரிய ராஜ்யத்தைப் பற்றி இவர்களால் சிந்திக்க முடியாது. இதன் விளைவாக இந்தப் பக்தியுள்ள மக்கள் யூதர்களின் வரிசையில் சேர்ந்துவிட்டார்கள்; “பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி” அதற்கேற்ற மனப்பக்குவம் இல்லாதவர்களாக யூதர்கள் இருந்தார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அதே வேளையில் அவருடைய சீஷர்களால் அதை புரிந்துகொள்ள முடிந்தது. *மத்தேயு 13:11.* இயேசு பவுலிடம் ஊழியத்தை ஒப்படைத்த போது அவர் குறிப்பிட்ட இரண்டு ராஜ்யங்கள் அல்லது இரண்டு ஆளும் சக்திகளை நம்மால் பார்க்க முடியாவிட்டால், “சபை” என்ற வார்த்தைக்கு அர்த்தமே இருக்காது. பார்க்கவும் *அப்போஸ்தலர் 26:18.* இந்த இரண்டு ராஜ்யங்களைக் குறித்த தெளிவில்லாத அநேக பிரசங்கியார்களும், போதகர்களும் சபையை வேத வசனத்தில் காணப்படாத ஒரு நிலைக்குக்





கொண்டுசெல்கிறார்கள். அவர்கள் அதை ‘‘தனித்து நிற்கும்’’ ஒரு அமைப்பாக, தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு பக்கத்தில் இருப்பதாகவோ அல்லது வெளியில் இருப்பதாகவோ அல்லது அதற்கு நிகராக இருப்பதாகவோ காண்பிக்கிறார்கள். மனிதருடைய ஞானத்தால் உருவாக்கப்பட்டுள்ள சமய அமைப்புகளில் ஒன்றைப் போல ராஜ்யம் இருக்கும் என்று நாம் நினைக்கலாகாது. 1கொரிந்தியர் புத்தகத்தின் முதல் நான்கு அதிகாரங்களில் “மனிதருடைய ஞானம்” என்ற பிரச்சனையை தீர்ப்பதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் கவனம் செலுத்துகிறான். மனிதனுடைய ஞானத்தை தேவனுடைய ஞானத்தை விட முக்கியமாக நினைக்கின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களால், கிறிஸ்தவத்தில் காணப்படும் எல்லா வித பிரிவினைகளும் உண்டாக்கப்படுகின்றன என்பதை புரிந்துகொள்கிறோம்.

“மனிதருடைய ஞானத்தால் ஆன பெட்டிக்குள்” அகப்பட்டிருக்கும் பக்தியுள்ள மக்கள், பொதுவாக சபையை ராஜ்யத்திற்கு வெளியில் உள்ள அமைப்பாகவே பார்க்கின்றார்கள். இயேசுவானவர் ஏற்கனவே செய்து முடித்துவிட்ட காரியத்தை உணராமல், அவர் திரும்ப வந்து அதைச் செய்வாரென்று அதிக எண்ணிக்கையில் உள்ள இந்த பக்தியுள்ள மக்கள் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பூமியில் மறுபடியும் வந்து வாழ்வது அவருக்கு எள்ளளவும் மகிழ்ச்சியை தராது. *லூக்கா 9:41; யோ. 19:30.* இயேசு தேவனுடைய ராஜ்யத்தை பிரசங்கித்தார். தேவனுடைய ராஜ்யத்தை குறித்து பிரசங்கிக்கும்படி அவர் அப்போஸ்தலர்களுக்கு போதித்தார். *அப்போஸ்தலர் 19:8.* கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டிருக் கிறார்கள். *கொலோசெயர் 1:13.* இயேசு சபையின் “அதிபதியாகவும் இரட்சகராகவும்” தேவனுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் ஊழியஞ்செய்து

கொண்டிருக்கிறார். *அப்போஸ்தலர் 5:31.* இயேசுவின் போதனைகள் மூலமாகவும், அப்போஸ்தலருடைய போதனைகள் மூலமாகவும் தேவனுடைய ராஜ்யத்தை விசுவாசத்தால் எவர்களால் பார்க்க முடிந்ததோ, அவர்களிடம் இந்த ராஜ்யம் முன்பே வந்துவிட்டது என்று அர்த்தம். *மத்தேயு 6:10.* இந்த போதனைகள் மனுக்குலத்தை தேவன் உருவாக்கியதற்கான நோக்கத்தை நிறைவேற்றுகின்றன. *ரோமர் 8:29.* இந்தப் பூமியின் மீது ஆளுகை செய்வதற்காக இயேசு திரும்பி வருவார் என்று வேத வசனத்தில் எதுவும் இல்லை. இயேசு வானத்திலிருந்து இறங்கி வருவார் என்று வேத வசனங்கள் தெரிவிக்கின்றன. *1 தெச. 4:15-18.* ஆனால் இந்தப் பூமியின் மீது ஆளுகை செய்வதற்கு அவர் ஏன் திரும்ப வர வேண்டும்? தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற சபையை நமது நியாயத்தீர்ப்புக்கு பிறகு, அவர் தேவனிடம் திரும்ப ஒப்படைத்துவிடுவார். *மத்தேயு 13:36-43; யோவான் 17:20-24.* ஆளுகை செய்வதற்கு இயேசு திரும்ப இந்தப் பூமிக்கு வருவதாய் இருந்தால், இதற்குமேல் அவர் என்ன செய்யப்போகின்றார்? நிச்சயமாய், மக்களில் சிலர் "இரண்டாவது சந்தர்ப்பம்" ஒன்று இருப்பதாக கூறுகின்ற சாத்தானுடைய உபதேசத்தை நம்புவதற்கு விருப்பப்படுகிறார்கள். யூதர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இரண்டாவதாக ஒரு வாய்ப்பை கொடுக்கும்படிக்கு இயேசு திரும்பவும் வருவாரென்று வேதாகமம் எதுவும் குறிப்பிடுவதில்லை. தேவனையும் அவருடைய ராஜ்யத்தின் குறிப்பிட்ட பகுதிகளையும் இயேசு ஒரு போதும் ஆளுகை செய்ததில்லை. *1 கொரி. 15:27; உபாகமம் 29:29.* எப்படியிருந்தாலும் "அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து" சேர்க்கும்படிக்கு தம்மிடம் ஒப்புக்கொடுக்கப்பட்ட தேவனுடைய ராஜ்யத்தின் ஆட்சிப் பொறுப்பை அவர் திரும்பவும் பிதாவிடம் ஒப்படைத்துவிட்ட பிறகு, காலம் முடிவடைந்துவிடும். *1 கொரி. 7:29,30; எபிரெயர் 2:10.*





தற்பொழுது இயேசு கிறிஸ்தவர்களின் ராஜாவாக இருக்கின்றார். *அப்போஸ்தலர் 2:30-36.* இவ்விதமாக, தமது ராஜ்யத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்ற இதே மக்களுக்கு அவர் தலைவராக இருந்து தேவனுக்கு ஊழியஞ்செய்துகொண்டிருக்கிறார். அவருக்குள் ஜீவன் இருக்கின்றது, அந்த ஜீவன் கிறிஸ்தவர்களுடைய வாழ்வைக் குறித்து தெளிவாக விளக்குகின்றது. *யோவான் 7:16,17; 8:12;10:14; 11:25; 12:25,26;14:6,7.* இயேசுவின் போதனைகள் இல்லாமல், மனிதர்களாக நாம் எப்படி செயல்படவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள முடியாது. *ரோமர் 1:18-32.* மனுக்குலத்தின் ஒவ்வொரு தலைமுறையும் இதை நிரூபிப்பது இல்லையா? நாம் எப்படி படைக்கப்பட்டிருக்கின்றோம், எதற்காக படைக்கப்பட்டிருக்கின்றோம் என்று நம்மைப் பற்றி சிந்திப்பதற்கு இயேசு நம்முடைய தலைவராக இருக்கவேண்டியது அவசியம். ஆகையினால், சாத்தானுடைய ராஜ்யத்தை விட்டு "வெளியே அழைக்கப்பட்ட மக்களை" வழிநடத்துபவராகவும், அவர்களுக்கு ஆலோசகராகவும், அவர்களைப் பற்றி சிந்திப்பவராகவும் இருப்பவர் தலையாகிய இயேசுவே. இயேசு கிறிஸ்து ராஜாவாகவும், கர்த்தராகவும், பிரதான ஆசாரியராகவும், அதிபதியாகவும், இரட்சகராகவும் இருக்கின்றார். அதுமட்டுமல்ல "வெளியே அழைக்கப்பட்ட" மக்களாகிய சபைக்கு அவரே தலைவராகவும் இருக்கின்றார். *எபேசியர் 1:22,23.* சபை என்பது தேவனுடைய ராஜ்யமும் அல்ல, கிறிஸ்துவின் ராஜ்யமும் அல்ல. தற்பொழுது இயேசுவின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்ற மக்கள் கூட்டமே சபையாக இருக்கின்றது. உலக அளவில் "வெளியே அழைக்கப்பட்ட" மக்களாக நாம் இருக்கிறோம்; இருப்பினும், இந்த மக்களால் ஆன ஒவ்வொரு கூட்டமும் சபையென்னப்படுகிறது. "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்று இயேசு சொன்னது போல் இது இருக்கின்றது. *மத்தேயு 18:20.*

உலகளாவிய சபை தனித்தனிக் கூட்டங்களாக செயல்படுகின்றது. பவுல் ரோமாபுரியிலிருந்த பரிசுத்தவான்களுக்கு சொன்னது போல "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்." *ரோமர் 16:16.* சபை ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காக கூடியிருந்தாலும் அல்லது கலைந்த நிலையிலிருந்தாலும் அது சபை தான். *1 கொரி. 14:26.* இந்த சபைகள் எல்லாவற்றிலும் இருக்கின்ற அங்கத்தினர்கள் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். *அப்போ. 8:4; 20:7.* தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் சொந்தமான ஒரு ராஜ்யம் இருக்கின்றது. *யோவான் 17:20,21; கொலோ. 3:1-4.*

இயேசு நம்முடைய "இரட்சகராகவும் அதிபதியாகவும்" இருக்கின்றார். *அப்போஸ்தலர் 5:31.* கிறிஸ்தவர்கள் அவருடைய சரீரத்தோடு இணைந்து செயல்படுவதற்காக இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு ஒளியின் ராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டிருக் கிறார்கள். நாம் இயேசுவை நமது தலைவராக ஏற்றுக்கொண்டிருப்பதால், தேவனுடைய ஞானத்தைப் பற்றி தெரிந்துகொள்ள அனுமதி பெற்றிருக்கின்றோம். நமக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. *1 கொரி. 2:16.* தேவனுடைய பிள்ளைகள் ஆகாவிட்டால் இந்த உலகத்தில் தாங்கள் பிறந்ததற்கான காரணத்தையே அறியாமல் போகும் சூழ்நிலையில் உள்ள மக்களிலிருந்து, தேவனுக்கென்று பிள்ளைகளை உருவாக்குவதே அவருடைய திட்டமாயிருக்கின்றது. எனவே, இயேசு இந்தப் பூமியின் மீது ஆளுகை செய்வதற்காக திரும்பவும் வந்தால், இன்னும் அவர் மனுக்குலத்திற்கு செய்வதற்கு என்ன இருக்கின்றது? "அவபக்தியுள்ளவர் களாய் எதிர்த்து நிற்காமல் இருந்தால்," இஸ்ரவேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்பது நமக்குத் தெரியும். *ரோமர் 11:24,26.* இயேசு பரலோகத்திற்கு திரும்ப சென்றுவிட்ட பிறகு "தேவனுடைய இஸ்ரவேலின்" அடையாளத்தையும் நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது.





*கலாத்தியர் 1:13*இல் நாம் பார்க்கின்ற தேவனுடைய சபையும்" *கலாத்தியர் 6:16*இல் நாம் பார்க்கின்ற "தேவனுடைய இஸ்ரவேலும்" ஒரே மக்களையே குறிக்கின்றது. சாத்தானுடைய ராஜ்யத்தை விட்டு இயேசு கிறிஸ்துவால் வெளியே அழைக்கப்பட்ட மக்களை தேவனுடைய முன்னறிவின்படியே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று பேதுரு அடையாளப்படுத்தினான். *1 பேதுரு 1:1;* பார்க்கவும் *ரோ. 9:6-8;11:5-7.* பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்கு தேவன் பண்ணின வாக்குத்தத்தம் மாறவில்லை. *ஆதியாகமம் 12:3.* தேவன் யூதர்களையும், புறஜாதிகளையும் தனித்தனியே பிரித்துவைத்ததை பற்றிய ரகசியம் தனக்கு வெளிப்படுத்தப்பட்டதாக அப்போஸ்தலனாகிய பவுல் எபேசுவிலிருந்த சபைக்கு தெரியப்படுத்தினான். *எபேசியர் 3:2-6.* தேவன் ஆபிரகாமுக்கு பண்ணின வாக்குத்தத்தத்தை எப்படி நிறைவேற்றுகிறார் என்பதை தெளிவாக புரிந்துகொள்ள ரோமர் புத்தகத்தில் 9 முதல் 11 வரை உள்ள அதிகாரங்களையும், எபேசியர் புத்தகத்தில் முதல் மூன்று அதிகாரங்களையும் தயவுகூர்ந்து வாசியுங்கள். பார்க்கவும் *ஆதி. 12:3;* பாடம் ஆறு.

தேவனுடைய ராஜ்யம் என்ற குடையின் கீழாக, மாம்சத்திற்குரிய இஸ்ரவேலருக்கும், சபைக்கும் பிரயோஜனம் உண்டாகும்படியாக அநேக பிரச்சனைகளை இயேசு தீர்த்தார். தேவனுடைய ராஜ்யமாகிய இயேசுவின் ராஜ்யத்தை முன்னுரையாக நம்முடைய மனங்களில் வைத்துக் கொண்டால், மற்ற தலைப்புகளைப் பற்றி நாம் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். *எபேசியர் 5:5.* தேவன் மனிதரை உருவாக்கும் விதம் மாற்றம் அடையாமல் இருப்பதால், இஸ்ரவேலர்களானாலும், கிறிஸ்தவர்க ளானாலும் எல்லாரும் ஒரே வித மனோசக்தியும் திறமையும் உள்ளவர்களாக இருக்கின்றனர். இயேசு இஸ்ரவேலருக்கு வாய்மொழி

வழியாகவும், கிறிஸ்தவர்களுக்கு சுவிசேஷ புத்தகங்கள் வழியாகவும் போதித்தார். நம்முடைய மனமும், இருதயமும், மனச்சாட்சியும், உடலும் பெற்றிருக்கின்ற திறமைகள் நமது தனிப்பட்ட "உள்ளான மனிதனுக்கு" உதவி செய்கின்ற விதமும் மாற்றம் அடையவில்லை. ஆதாமும், ஏவாளும் தேவனுடனான உடன்படிக்கையை முறித்துவிட்டதால் நமக்கு கிடைத்த "நன்மை தீமை அறியும் சக்தியானது" மனிதருக்கென்று தேவன் கொடுத்திருக்கும் வடிவமைப்பிலிருந்து அகற்றப்படவேயில்லை. இரண்டு சாலைகளின் சந்திப்பில் அமைந்துள்ள எச்சரிக்கை விளக்குப் போல நமது மனச்சாட்சியும், ஞாபகசக்தியும் செயல்படுகின்றன. கிறிஸ்தவர்களாகிய நாம், நன்மையானது என்று நம்புகின்ற காரியத்தை செய்கின்ற போது நமக்குள் பச்சை விளக்கு எரிகின்றது. நாம் எவையெல்லாம் நன்மையென்றும், தீமையென்றும் நம்புகின்றோமோ அவைகளைக் குறித்த இரண்டு நீண்ட பட்டியல்கள் யாவருடைய மனங்களிலும் உள்ள நினைவகங்களில் இருக்கின்றன. நம்முடைய உள்ளான மனிதர்களைக் குறித்து அறிந்துகொள்ளும் திறமையும் நமக்கு இருக்கின்றது. *2 கொரிந்தியர் 13:5.* "நம்முடைய உள்ளான மனிதனில் அறிந்துகொள்வதை தான் மனச்சாட்சி என்ற வார்த்தை அர்த்தப்படுத்துகின்றது. தீமை என்று நாம் நம்புகின்ற காரியத்தை தேர்ந்தெடுக்கும் போது, நமது மனச்சாட்சியை நாம் மதிக்காமல் நடந்துகொள்கிறோம். மூன்றாம் பாடத்தை பாருங்கள். வயதில் பெரியவர்களுக்கு இருக்கும் மகிமையை அவர்கள் குற்ற உணர்வு கொள்ளையடித்துவிடுகிறது.

"கிறிஸ்துவுக்குள்" விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் தீமையை நன்மையினால் வெல்ல முடியும். *ரோமர் 12:21.* நாம் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்கு பேதைகளுமாயிருப்பதற்கு தெய்வீகத் தன்மை உடைய மூன்று பேரின் உதவியும் தேவைப்படுகிறது. *ரோமர் 16:19.*





ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் கிறிஸ்தவர்களுக்கு கிருபையும், உதவியும் தேவைப்படுகின்றன; ஒன்று, கிறிஸ்துவின் பலியினால் உண்டாகும் கிருபையும் நமது பிரதான ஆசாரியராக அவருடைய செயல்பாடுகளும் நமக்கு அவசியமானவைகள். இரண்டு, நமது ராஜாவாகிய இயேசு இரவும் பகலும் நம்மை பாதுகாத்து வழிநடத்துகின்றார். *மத்தேயு 28:18; எபேசியர் 1:18-21.* மூன்று, "இலவசமாக" சுத்திகரிப்பு செய்யும் பரிசுத்த ஆவியானவருடைய திட்டத்தில் கிறிஸ்தவர்கள் உற்சாகமாக பங்கு பெற்று தங்களை சுத்திகரித்துக் கொள்ளவேண்டும். *2 தெச. 2:14.* நான்கு, நமது பிதாவிடமிருந்து தினந்தோறும் இறங்கி வரும் நன்மையான ஈவும், பூரணமான வரங்களும் நமக்கு அவசியமானவைகள். *2 கொரி. 1:3,4; யாக்கோபு 1:16,17.* ஐந்து, சபையோடு நமக்கு ஏற்படுகின்ற ஐக்கியம் நமது சமூகத் தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்கு அவசியமானது. *1 கொரி. 12:21-26; எபேசியர் 4:14-16.* "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?" என்று கேட்ட இயேசுவானவர், தமது சீஷர்களைச் சுட்டிக் காண்பித்து, "இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்." *மத்தேயு 12:48-50.* பார்க்கவும் *2 கொரிந்தியர் 6:14-16.*

கிறிஸ்தவர்களாகிய நமக்கும் நமது பிதாவுக்கும் இடையில் தற்பொழுதுள்ள உறவைப் பற்றி அடுத்த பாடத்தில் நாம் ஆராய்ச்சி செய்வோம்.